மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம் ஆனால், கோவை அவனாசி சாலையில் மட்டும்தான் அது போன்ற சுவரொட்டிகள் காணப் பட்டன.

(இ) இது போன்ற வழக்குகளில், சம்பந்தப்பட்டவர்கள் மீது இந்திய குற்றவியல் தண்டனை விதித் தொகுப்பின்படி நடவடிக்கை எடுக்கலாம். வேறு எந்த செயற்குறிப்பும் அரசாங்கத்தின் பரிசீலனை யில் இல்லை.

திரு. எம். எத்திராஜுலு : இந்த சுவரொட்டி ஒட்டியவர்களை அர சாங்கம் கண்டுபிடித்து ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த சுவரொட்டியில் அதை அச்சடித்த அச்சகத்தினுடைய பெயர் இல்லாமையால், குற்றவாளி களைக் கண்டுபிடிக்க இயலவில்லை.

Newly created Departments in the Secretariat

*42. *Q.*—THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) the Departments which were newly created in the Secretariat after the D.M.K. assumed office ; and

(*b*) the annual expenditure involved thereby ?

தலைமைச் செயலக புதிய துறைகள்

திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தி.மு.க. அரசு பதவி ஏற்ற பின் தலைமைச் செயலகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட துறைகள் யாவை ?

(இ) இதனால் ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவு யாது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

(அ) கல்வித் துறை
பொதுச் சுகாதாரத் துறை (தற்போது சுகாதாரம் குடும்ப நலத் துறையாக உள்ளது)
சமூக நலத் துறை
தொழில் துறை
தொழிலாளர் துறை
கூட்டுறவுத் துறை

(இ) ஆண்டுச் செலவு ரூ. 2,34,580—70 ஆகுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது. (இரண்டு லட்சத்து முப்பத்தி நாலாயிரது ஐநூற்றுத் எண்பது ரூபாய், எழுபது காசு மட்டும்).

[29th August 1970

திரு. கே. ராஜாராம் : இவையெல்லாம் முன்பே இருந்த துறைகள் தானே ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கேட்டிருக்கிற கேள்வி என்னவென்றால், திராவிட முன்னேற்றக் கழக அரசு பதவி ஏற்றபின் ஏற்படுத்தப்பட்ட பிரிவுகள் பற்றியதாகும். முன்பு இவை இணைந்திருந்தன. அப்படி இணைந்திருந்தவைகள் சில துறைகளில் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. டி. சந்தோஷம் : ஒரு 'ஸ்பெஷல்' ஆபிசர் நியமிக்கப்பட்டிருப்பதாக நினைவிருக்கிறது. அண்ணா அவர்கள் பதவி ஏற்றபோது நியமிக்கப்பட்டார். அவருடைய வேலை இந்தச் செயலகத்தில் எத்தனை துறைகளைக் குறைக்கலாம் என்று யோசனை சொல்வதாக இருந்தது. அவருடைய வேலை இப்போது முடிந்துவிட்டதா ? ஏற்கெனவே உள்ள துறைகளோடு அவருடைய துறையும் சேர்ந்து 100 ஒடு 101 ஆகச் செயல்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவருடைய வேலை முடிந்துவிட்டது.

திரு. எம். எத்திராஜுலு : ஏற்கெனவே செகரட்டேரியட்டில் 10 துறைகளுக்கு மேல் இல்லை. இவற்றை இப்போது இரண்டிரண்டாகப் பிரித்து ஒவ்வொரு துறைக்கும் ஒரு செகரட்டரியைப் போட்டிருக்கிறார்கள். முன்பிருந்த பத்துத் துறைகளையும் இதையும் சேர்த்துப் பார்த்தால், ஒவ்வொரு துறையிலும் இரண்டு மூன்று செகரட்டரிகள் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சிக்கனத்தைக் கையாள்வதாகச் சொல்கிற இந்த அரசு ஒவ்வொரு துறைக்கும் மூன்று ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைப் போட்டு, பணத்தை வீணாக விரயம் செய்வது நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சிக்கனத்தைக் கைக்கொள்வது என்ற அடிப்படையில் காரியங்கள் விரைவாகவும் பரவலாகவும் நடைபெறாமல் போய்விடக் கூடாது என்பதை உள் நோக்க வேண்டும். இந்த அரசு பதவியேற்ற பிறகுதான் துறைகள் பிரிக்கப்பட்டன என்பதில்லை. 1959-ல் பப்ளிக் டிபார்ட்மெண்ட் இரண்டாகப் பிரிக்கப்பட்டு Rural Development and Local Administration Department என்றும், Public Department என்றும் ஆகியது. அதைப் போலவே Education and Public Health Department பிரிக்கப்பட்டது. 1965-ல் Food and Agriculture Department பிரிக்கப்பட்டு, Food Department என்றும், Agriculture Department என்றும் தனியாக ஆகியது. அதைப் போலவே அசெம்பிளி, கவுன்சில் டிபார்ட்மெண்ட் ஒன்றாக இருந்து, பிறகு பிரிக்கப்பட்டு அசெம்பிளி ஒன்றாகவும் கவுன்சில் ஒன்றாகவும் இயங்கத் தொடங்கியது. சிக்கனம் வேண்டுமென்ற பெயரில், செய்யப்படுகிற காரியங்கள் விரைவாக நடைபெறுவதற்கு முட்டுக்கட்டையாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

MR. CHAIRMAN : We will now take up the postponed questions.